# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.338/பேரூ/2023
நாள்.14.12.2023

திரு. மு. தினேஷ்,
மணலூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை, சேணியர் வீதி, எண் 18, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு. தினேஷ் என்பவரது 16.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2023 அன்று பெறப்பட்டு, 338/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை, சேணியர் வீதி, எண் 18, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு. தினேஷ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலக நிர்வாகத்தால் விளம்பரம் அளிக்கப்படும் பத்திரிக்கை செய்திகளில் மணலூர்பேட்டை பேரூராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ஜெ.ரேவதி என விளம்பரம் அளிக்கின்றனர்.

மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலக பெயர் பலகை மற்றும் கல்வெட்டுகளில் ஜெ. ரேவதி ஜெய்கணேஷ் என தலைவருடைய கணவரின் பெயரையும் சேர்த்து எழுதியுள்ளனர். மேலும் பேரூராட்சி நிர்வாகத்தால் அமைக்கப்பட்டுள்ள விளம்பர போர்டு மற்றும் பெயர் பலகைகளில் ஜெ. ஜெய்கணேஷ் என விளம்பரபடுத்தப்பட்டுள்ளது.

ஜெ. ரேவதி ஜெய்கணேஷ் என்ற பெயரை நீக்கி பேரூராட்சிமன்ற தலைவர் ஜெ. ரேவதி என விளம்பரபடுத்த வேண்டி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 13.02.2023 தேதியில் புகார் அளித்தேன். மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு 15.09.2023 தேதியில் புகார் அளித்தேன். எனது புகார் மீது உரிய விசாரணை மேற்கொண்டு மணலூர்பேட்டை பேரூராட்சியில் உள்ள பெயர் பலகை கல்வெட்டு மற்றும் எல்லையில் உள்ள விளம்பரபலகை மற்றும் மினிகுடிநீர் டேங்க் என அனைத்து இடங்களிலும் உள்ள ஜெய்கணேஷ் என்ற பெயரை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 27.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரான ம.மேகநாதன் ஆகிய நான் மணலூர்பேட்டை பேரூராட்சியை சார்ந்த திரு. மு.தினேஷ் அவர்கள் அளித்த குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்ட விளக்கம் அளித்துள்ளார்:-

1) மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட திரு. மு. தினேஷ் என்பவரால் கடந்த 13.02.2023 ஆம் தேதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கு மனு எண் GOV/TN/E/2023/0000879-படி இப்பேரூராட்சியின் விளம்பர பலகைகளில் பேரூராட்சி மன்ற தலைவரின் கணவர் பெயரும் சேர்த்து விளம்பரப்படுத்துவதாகவும் விளம்பரங்களில் தலைவரின் கணவர் பெயரை நீக்கம் செய்திட தெரிவித்து புகார் மனு அளித்துள்ளார். மேலும் இப்புகார் மனுவில் பேரூராட்சி நிர்வாகத்தால் அளிக்கப்படும் பத்திரிகை செய்தி விளம்பரங்களில் பேரூராட்சி மன்ற தலைவரின் பெயர் மட்டுமே விளம்பரம் செய்யப்படுகிறது என்ற விபரத்தினை புகார் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக் கொள்வதுடன் உரிய செய்தித் தாள் விளம்பர நகல்களை இதனுடன் இணைத்து பணிந்து சமர்பித்துக் கொள்கிறேன்.

2) தற்போது பொறுப்பில் உள்ள பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தொடர்பான கல்வெட்டில் பேரூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் தொடர்பான கல்வெட்டில் பேரூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் கணவரின் பெயர் சேர்த்து நிறுவப்பட்டுள்ளது எனவும் பேரூராட்சி தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள எல்லை போர்டுகளில் மட்டும் பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்ற தலைவரின் பெயருடன் அவரது கணவரின் பெயரை

சேர்த்து பெயிண்டால் மட்டுமே எழுதப்பட்டுள்ளது என்பதனை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

3) புகார் மனுதாரர் திரு. மு. தினேஷ் என்பவரால் கடந்த 13.02.2023ம் தேதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கு மனு எண்.GOVTN/E/2023/0000879-ன்படி அனுப்பிவைக்கப்பட்ட புகார் மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு பிரிவிற்கும், புகார் மனுதாரருக்கும் இவ்வலுவலக கடித ந.க. எண்.136/2023, நாள் 16.02.2023ன்படி உரிய பதிலறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அதன் நகலினை இதனுடன் இணைத்து சமர்பிக்கப்படுகிறது என்பதனை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

4) மேலும், தற்போது தமிழ்நாடு அரசிதழ் எண். 46, நாள் 22.11.2023–ல் பக்கம் எண். 1537–ல் வரிசை எண். 21004–ல் தற்போதைய பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ஜெ. ரேவதி என்பதை திருமதி ரேவதி ஜெய்கணேஷ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தங்களின் மேலான பார்வைக்கு தெரிவித்துக் கொள்வதுடன் உரிய தமிழ்நாடு அரசிதழ் நகலினை இதனுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது என்பதனை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, புகார் மனதாரரே பேரூராட்சியின் மூலம் வழங்கப்படும் அரசு விளம்பரங்களில் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜெ.ரேவதி என விளம்பரம் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளதாலும் பேரூராட்சியால் அளிக்கப்படும் விளம்பரங்களில் பேரூராட்சி மன்ற தலைவரின் கணவர் பெயரை சேர்த்து விளம்பரம் ஏதும் செய்யப்படுவதில்லை எனவும் தற்போதைய பேரூராட்சி மன்ற பொறுப்பில் உள்ள அனைத்து பேரூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் கணவர்களின் பெயரினை சேர்த்து பேரூராட்சி அலுவலக வாயிலில் உள்ள கல்வெட்டில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளது எனவும் இதன்மூலம் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

**(4) மனுதாரர் மற்றும் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரும் 27.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

5) 27.11..2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

> கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள பெயர் பலகை மற்றும் கல்வெட்டுகளிலும் விளம்பரங்களிலும் மண்லூர்பேட்டை பேரூராட்சி தலைவரான திருமதி. ரேவதி என்பவரின் பெயருடன் அவரது கணவர் திரு. ஜெய்கணேஷ் என்பவரின் பெயரும் சேர்த்து பேரூராட்சியால் எழுதி வருகின்றனர். இது குறித்து பேரூராட்சியில் புகார் மனு அளித்தும் பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மணலூர் பேட்டை பேரூராட்சியில் உள்ள பெயர் பலகை மற்றும் கல்வெட்டுக்களில் பேரூராட்சி மன்றத் தலைவரின் பெயருடன் அவரது கணவரின் பெயரான ஜெய்கணேஷ் என்கின்ற பெயரை நீக்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் "என தெரிவித்துள்ளார்.

6) மணலூர்பேட்டை பேரூராட்சியின் செயல் அலுவலர் 27.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

"கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்பேட்டை பேரூராட்சி நகர மன்றத் தலைவர் திருமதி ரேவதி என்பவரின் பெயரை பேரூராட்சி பெயர் பலகையில் எழுதும்போது அவரது கணவரான திரு. ஜெய்கணேஷ் என்பவரின் பெயரும் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய பேரூராட்சி மன்ற பொறுப்பில் உள்ள அனைத்து பேரூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் கணவர்களின் பெயர்களையும் சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பேரூராட்சியின் பெயர் பலகையில் மன்றத்தின் பெண் உறுப்பினர்களின் பெயருடன் அவரது பெயரோ அல்லது அவரது கணவரின் பெயரோ உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப எழுதப்படுகின்றன

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், மணலூர்பேட்டை பேரூராட்சி செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது 16.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலக நிர்வாகத்தால் விளம்பரம் அளிக்கப்படும் பத்திரிகை செய்திகளில் மணலூர்பேட்டை பேரூராட்சி மன்றதலைவர் திருமதி ஜெ.ரேவதி, மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலக பெயர் பலகை மற்றும் கல்வெட்டுகளில் ஜெ. ரேவதி ஜெய்கனேஷ் என தலைவருடைய கணவரின் பெயரையும் சேர்த்து எழுதியுள்ளனர் புகார் தெரிவித்துள்ளார்.

மணலூர்பேட்டை பேரூராட்சியின் பெயர் பலகையில் மன்றத்தின் பெண் உறுப்பினர்களின் பெயருடன் அவரது பெயரோ அல்லது அவரது கணவரின் பெயரோ உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப எழுதப்படுகின்றன. மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் அரசு விளம்பரங்களில் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜெ.ரேவதி என விளம்பரம் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளதாலும் பேரூராட்சியால் அளிக்கப்படும் விளம்பரங்களில் பேரூராட்சி மன்ற தலைவரின் கணவர் பெயரை சேர்த்து விளம்பரம் ஏதும் செய்யப்படுவதில்லை எனவும் தற்போதைய பேரூராட்சி மன்ற பொறுப்பில் உள்ள அனைத்து பேரூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் கணவர்களின் பெயரினை சேர்த்து பேரூராட்சி அலுவலக வாயிலில் உள்ள கல்வெட்டில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளது மணலூர்பேட்டை பேரூராட்சியின் செயல் அலுவலர் என தெரிவித்துள்ளார்.

பொதுவாக பெண்கள் தங்கள் பெயரை தனித்தோ அல்லது தந்தையின் பெயருடன் இணைத்தோ அல்லது மரபு குடும்பப் பெயரைக் இணைத்தோ அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சேர்த்து பெயரிட்டு கொள்கின்றனர். திருமணம் ஆன பின்பு தங்களுடைய கணவர் பெயரை இணைத்துகொள்வது வழக்கமான நடைமுறையில் உள்ள ஒன்றாகும். எனவே, இந்நேர்வில் பேரூராட்சியின் நிர்வாகம் நடைமுறையில் உள்ள வழக்கப்படி செயல்பட்டுள்ளதாலும், சட்டத்தில் வழிவகை ஏதும் வரையறுக்கப்படாத

நிலையில் மனுதாரரின் மனு மீதான மேல் நடவடிக்கை தேவையில்லை எனக் கருதி அவ்வாறே முடிவு செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்ப

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.மு. தினேஷ்,
18, சேணியர் வீதி,
மணலூர்பேட்டை–605 754
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032